# ஆசிரை

**அன்பின் வாசக நெஞ்சங்களே!**

புதுவருடம் வரப்போகின்றது என்று எதிர்பார்த்து புதிய நம்பிக்கையோடு, புதிய எதிர்பார்ப்புக்களோடு, புதிய அணுகுமுறைகளோடு சென்ற வருடத்தில் நிகழ்ந்தவைகள் ஒரு பாடமாகவும், அனுதிய வருடத்தை எதிர்கொள்ள நாம் முன்வருவோமாக. 2018ம் ஆண்டு எமக்கு என்ன அழைப்பை விடுக்கின்றது, என்னத்தை எம்மிடமிருந்து எதிர்பார்கக்கிறது என்று நாம் சந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். சென்ற வருடத்தில் நிகழ்ந்தவைகள் எமக்கு ஒரு பாடமாகவும், அனுபவமாகவும் எமது மனதில் இருக்க வேண்டும். அதை உண்மையாகவே எண்ணிக்கொண்டு புதிய வருடத்தில் சிறப்பான தீர்மானங்கள் எடுத்து எமது வாழ்க்கையை முன் நகர்த்த வேண்டும். இன்னும் உற்சாகமாகவும், சந்தோசமாகவும் எமது வாழ்க்கையை கொண்டு நடாத்த வேண்டும். குறிப்பாக புது வருடத்தில் நாம் எல்லோரும் இறைவனின் பிரசன்னத்தை அடிக்கடி உணர வேண்டும். கூடுதலான நேரத்தை இறைவனுக்கு கொடுத்து அவரது அருளையும். பாதுகாப்பையும் பெறுவதற்கு முயர்சி எடுக்க வேண்டும். மூன்று அரசர்கள் இயேசு பாலகனைத் தேடி நீண்ட பயணம் மேற்கொண்டு கீழ்த்திசையிலிருந்து கூடுதலான நேரங்களை. காலங்களை செலவிட்டு வந்தார்கள். அது அவர்களுக்கு வீணாகப் போகவில்லை. மாறாக காலத்தால் அழியாத பதிவு இடம்பெறுகின்றது. தேடி வந்த மீட்பைக் கண்டடைந்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். சிறப்பான முயற்சி தோல்வியில் முடியவில்லை. புதிய ஆர்வம் பெற்றவர்களாய் புதிய பயணத்தை மேற்கொண்டவர்களாக இறைவனும் இவர்களுக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார். நாமும் புதிய முயற்சிகளில் ஈடுபடுவோம். புதிய பயணங்கள் செய்யவும் அதனூடாக இறைவனின் மக்களாக இந்த புதிய ஆண்டிலே வாழவும். நல்ல புதிய சிந்தனைகள் கொண்டு வாழவும். மற்றவர்களை உற்சாகமூட்டி இறையன்பிலும். பிறரன்பிலும் வாழவும் முயற்சியெடுப்போம்.

**நன்றி**

**அன்புடன்,**

**அருட்பணி யூட் நிக்ஸன்**

**Parish Priest**

**Our Lady of Deliverance Tamil Catholic Mission**

**Montreal (QC), Canada.**